**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**2025 - ம் ஆண்டு மார்ச் திங்கள் 14- ம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருமதி. N.மீனாட்சி, B.A.B.L., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதிமொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| பெயர் | : மணிகண்டன் | அசல் வழக்கு எண்:46/2023 |
| த/ பெயர் | : பழனிச்சாமி | வாதி தரப்பு சாட்சி எண். 2 |
| வயது | : 55/2025 | |
| கிராமம் | : பள்ளிவாசல் வீதி | |
| வட்டம் | : வால்பாறை | |
| சமயம் | : | |
| தொழில் | : தனியார் வேலை | |

**முதல் விசாரணை:**

1. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 புரோ நோட்டில் எழுதியது என்ற இடத்திலுள்ள கையொப்பம் யாருடையது என்றால் என்னுடையது. அதற்கு கீழ் உள்ள முகவரி யாருடையது என்றால் என்னுடைய முகவரியாகும். இந்த புரோ நோட்டை எழுதியது யார் என்றால் நான் தான். யார் சொல்லி எழுதியது என்றால் செல்வம் என்பவரிடம் சின்னமாரிச்சாமி பணம் பெற்று அதற்கு ஆதரவாக எழுத சொன்னார்கள். நான் எழுதினேன். வா.சா.ஆ.1 எந்த தேதியில் எத்தனை மணிக்கு எழுதினேன் என்றால் 01.06.2022-ம் தேதி இரவு 10.00 மணிக்கு எழுதினேன். வா.சா.ஆ.1 எழுதிய பின்பு யார் யார் கையொப்பம் செய்தது என்றால் சின்னமாரிச்சாமியும், நானும் கையொப்பம் செய்தோம். செல்வம், சின்னமாரிச்சாமிக்கு எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் ரூ.1,00,000/-ம் கொடுத்தார். கையொப்பம் செய்வதற்கு முன்பு சின்னமாரிச்சாமி புரோ நோட்டை படித்து பார்த்தாரா என்றால் படித்து பார்த்து, பணத்தை எண்ணி சரிபார்த்து பின்பு கையொப்பம் செய்தார். சின்னமாரிச்சாமியை எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் வேலை செய்யும் பைனாஸ்சின் பக்கத்து கடைக்கு அடிக்கடி வருவார். அவர் கல்லூரியில் வேலை செய்கின்றார். தைப்பூசம் குழுவில் நான் இருப்பதால் அன்னதானம் மற்றும் கோவில் சம்மத்தப்பட்ட மற்ற நிகழ்வுகளுக்காக கல்லூரிக்கு சென்று பேசி வரும் போது அவரை எனக்கு தெரியும். தைப்பூச குழுவில் இருந்து அன்னதானத்திற்கு யார் ஏற்பாடு செய்வது என்றால் செல்வம் ஏற்பாடு செய்வார். அந்த வகையில் எனக்கு வாதி, பிரதிவாதி இருவரையும் நன்கு தெரியும் என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் 12-ம் வகுப்பு படித்திருக்கிறேன். நானும், வாதி செல்வமும் ஒரே சமுகத்தை சேர்ந்தவர்களா என்றால் இல்லை. பிரதிவாதி என்ன சமூதாயத்தை சேர்ந்தவர் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி பட்டியல் சமூகத்தை சேர்ந்தவர் என்பது எனக்கு நன்கு தெரிந்திருந்தும் நான் வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்ன படித்திருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி வணிகவியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றிருக்கிறார் என்ற விவரம் எனக்கு நன்கு தெரிந்திருந்தும் நான் வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. நான் பைனாஸ்சில் வேலை செய்வதால் வரவு, செலவு கணக்கு அதில் வட்டி விகிதம் பற்றியும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். வாதி செல்வம் சிந்து பைனாஸ், கோயம்புத்தூரில் சரவணா பைனாஸ் மற்றும் சோலையாரில் ஒரு பைனாஸ் நடத்தி வருகிறார் என்பது

எனக்கு தெரியும் என்றால் தெரியும். வாதி செல்வம் நடத்தி வரும் பைனாஸில் நான் பணிபுரியவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 9/10, பள்ளிவாசல் வீதி என எனது முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 புரோ நோட்டை நான் தான் எழுதினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதி செல்வம் நகை கடை வீதியில் இருப்பதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் யாருடைய பெயரோ, முகவரியோ, கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். வாதி நடத்தி வரும் சிந்து பைனாஸ்னும், வாதி செல்வம் வீடும் வெவ்வேறு இடத்தில் உள்ளது என்றால் இல்லை. ஒரே இடத்தில் உள்ளது. வாதி செல்வம் வீடும், சிந்து பைனாஸ்னும் வெவ்வேறு இடத்தில் உள்ளது வழக்கிற்காக நான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எழுதிய வா.சா.ஆ.1 ஆவணத்தில் சின்னமாரிசாமி என உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதி வால்பாறை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணியாற்றி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் புரோ நோட்டு 01.06.2022-ம் தேதி நான் எழுதினேன் என்றால் சரிதான்.

4. அன்றைய தேதியில் பிரதிவாதி எங்கு பணிபுரிகிறார் என்று அவரது அடையாள அட்டையை பார்த்து புரோ நோட்டு எழுதினேனா அல்லது நானாக அவரது முகவரியை எழுதினேனா என்றால் பிரதிவாதி சொல்ல சொல்ல நான் எழுதினேன். பிரதிவாதி புரோ நோட்டு எழுதும் போது வால்பாறை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தான் வேலை செய்கிறார் என்று எனக்கு முன்பே தெரியுமா என்றால் தெரியும். வாதி செல்வம் என்பவரின் மகள் சிந்து வால்பாறை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஆசிரியாராக பணிபுரிந்து வருகிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி ரூ.1,00,000/-ம் பெற்றுக்கொண்டு புரோ நோட்டில் கையொப்பம் செய்ததாக நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், புரோ நோட்டில் இருப்பது பிரதிவாதியின் கையொப்பம் அல்ல என்றாலும் சரியல்ல.

5. பிரதிவாதி என் முன்பாகத்தான் கையொப்பம் செய்தார். 01.06.2022-ம் தேதி பிரதிவாதி வால்பாறை கல்லூரியில் வேலை செய்யவில்லை. நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 01.06.2022-ம் தேதி பிரதிவாதி நீலகிரி மாவட்டம், கூடலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணிபுரிந்தார். இந்த விவரம் எனக்கு நன்கு தெரிந்திருந்தும் நான் வழக்கிற்காக தவறாக சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை ஏமாற்றி பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக வாதியுடன் கூடி தாவா புரோ நோட்டை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. பிரதிவாதி தற்போது வால்பாறை அரசு கல்லூரியில் பணிபுரிந்து வருகிறார் அவரை அங்கு படிக்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் அவமானபடுத்த வேண்டும் என்பதற்காக வாதியுடன் சேர்ந்து நான் செயல்படுகிறேன் என்றால் சரியல்ல. தாவா புரோ நோட்டில் ரூ.1,00,000/-த்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1% வட்டியுடன் சேர்த்து கூடிய வட்டியும், முதலும் தங்களுக்காவது தங்களுக்கு உத்தரவு பெற்றவர்களுக்காவது வேண்டும் போது நான் செலுத்த உடன்பட்டிருக்கிறேன் என்று உள்ளதா என்றால் ஆமாம். ரூ.100/-க்கு 1 பைசா வட்டி வீதம் என்றால் மாதம் ஒன்றுக்கு ரூ.1,00,000/-த்திற்கு ரூ.1000/- வட்டி வரும் என்றால் சரிதான்.

7. 14 மாதத்திற்கு எவ்வளவு வட்டி வரும் என்றால் ரூ.14,000/- வரும். தாவா புரோ நோட்டில் வட்டியை கழித்து கொண்டு அசலை மட்டும் கொடுத்தால் போதும் என்று வாசகம் எதுவும் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி அரசு பணியில் இருக்கக்கூடாது என்று அவரை அரசு பணியில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்பதற்காக தவறான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கல்லூரி முகவரி

கொடுக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி எந்த முகவரியில் குடியிருந்து வருகிறார் என்று இல்லை என்றால் சரிதான். வாதி கேட்டுக்கொண்டதற்காக வா.சா.ஆ.1 ஆவணம் நான் போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் தயாரிக்கப்பட்ட கால கட்டத்தில் பிரதிவாதி வால்பாறையில் குடியிருக்கவில்லை, வால்பாறை கல்லூரியில் பணிபுரியவில்லை என்பதால் தாவா புரோ நோட்டு பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.